





# EPF 25% வரி விதிப்பை உடனடியாக நிறுத்து!

ஊழியர் சேம நிதியம்,ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை,ஓய்வூதிய கொடுப்பனவுகள் உள்ளிட்ட நிதியங்கள் மீதான மிகைக் கட்டண வரி விதிப்பு தொடர்பாக ஐக்கிய ஊழியர் சங்கத்தின் தலைவரும் குருநாகல் மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினருமான அசோக அபேசிங்க ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஸ, நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஸ தொழிலாளர் உறவுகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாஆகியோருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் வருடாந்தம் 2000 மில்லியனுக்கும் அதிகமான இலாபம் ஈட்டும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் மீது 25% மிகைக் கட்டண வரி விதிப்பை முன்மொழிந்துள்ளது.

உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் வரையறையின் பிரகாரம் ஊழியர் சேம நிதியம்,ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை,ஓய்வூதியக் கொடுப்பனவு நிதியம், ஓய்வூதிய நிதி நிறுவனங்கள் மேற்கூறிய வரையறையில் அடங்கும்.

மேற்கூறிய அனைத்து நிதிகளும்



நமது நாட்டின் உழைக்கும் மக்கள் தங்கள் அறிவையும், உழைப்பையும், வியர்வையையும் சிந்தி தங்கள் எதிர் கால பாதுகாப்புக்காக திரட்டிய நிதியாகும். இந்த நிதிகள் ஒருபுறம், சமூக பாதுகாப்பு நிதியங்களாகும்.இத்தகைய நிதியங்களுக்கு வரி விதிக்காமல், வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய விடயமாகும். இந்த நிதியங்களுக்கு பங்களிக்கும் உறுப்பினர்களாக அரச நிறுவனங்கள்,கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபைகள் மற்றும் தனியார் துறை ஊழியர்கள் இருக்கின்றனர்.

இம்மக்கள் தாம் பெறும் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு தமது வாழ்வாதாரத்தை மேற்கொள்கின்றனர். இவர்களுள் பெரும்பாலானவர்களுக்கு வேறு வருமானம் வழிகள் இல்லை. ஆனால் அவர்கள் பல மறைமுக வரிகளுக்கு பங்களிக்க வேண்டியுள்ளது. உணவு, மின்சாரம், எரிவாயு மற்றும் தண்ணீர் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் மற்றும் பிற சேவைகளுக்கும் அவர்கள் வரி செலுத்த வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் உடனடியாக வழங்கப்பட்ட வரிச்சலுகைகளால் பாரிய வர்த்தக நிறுவனங்கள் பயனடைந்த போதிலும், மக்களுக்கு எவ்வித நன்மையும் இதனால் கிடைக்கவில்லை. அரசின் வருமானம் சரிந்து நாடு கடும் பாதாள நிலைக்கு சென்றதே இதன் மூலம் நடந்ததாகும். அரசாங்கம் எடுக்கும் தவறான முடிவுகளுக்கு இந்த நாட்டில் உழைக்கும் மக்கள் விலைபோக வேண்டிய தேவைப்பாடு இல்லை. மேற்கண்ட நிதியில் உள்ள உறுப்பினர்களே இந்த வரி விதிப்பால் பாதிக்கப்படுகின்றனர்.

அதிக வாழ்க்கைச் செலவில் தவிக்கும் உழைக்கும் மக்கள், தாங்கள் சம்பாதித்த பணத்தில் சேமித்த நிதிக்கு வரி விதிப்பு மேற்கொண்டமைக்கு எவ்வித தார்மீகமும் அதேபோல் நியாயமும் இல்லை என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்டுகிறோம். எனவே இந்த வரி விதிப்பை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். இல்லாவிடின் உழைக்கும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து தரப்பினர்களுடன் ஒன்றிணைந்து இந்த வரி அறவீட்டிற்கு எதிர்ப்புத் தெரிவிப்போம் என்பதையும் தெரிவிக்கிறோம்.